SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக்கொண்டுவந்து விவாதத்தை நடத்த வேண்டுமென்று கோருவதன் நோக்கம் என்னவென்றால் கண்ணனூர் சென்ட்ரல் ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிற இரண்டுபேர்களுக்கும் இருக்கக் கூடிய அநீதத்தை எடுத்துக்காட்டுவதற்காகத்தான். அவர்கள் ஆயுட்கால தண்டனையை அடைந்தவர்கள். இதே வழக்கில் ஆயுட்கால தண்டனையை அடைந்தவர் மற்றொருவர் விடுதலைச் செய்யப்பட்டு ஆறுமாதத்திற்கு மேலாகிறது. அவர் விடுதலை செய்யப்பட்டும், இவர்கள் விடுதலை செய்யப் படாதது காரணத்தினாலே இவர்களுக்கு விடுதலை கிடைப்பதற்கு மார்க்கம் இல்லாமல் இருக்கிறது."

MR. SPEAKER :—" இது விஷயத்தை கோர்ட்டில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்."

SRI M. KALYANASUNDRAM :—'' ஹைகோர்ட்டில் இந்தக் கேஸ் பைசல் ஆகி அவர்கள் தண்டனையை அனுபவித்து வருகிறார்கள். ஜெயி லில் இருக்கும் சாதாரண கைதிகளுக்கு இருக்கும் அனுகூலங்கள் கூட கம்யூனிஸ்ட் கைதிகளுக்கு கிடைப்பதில்லை. கம்யூனிஸ்ட் கைதிகள் என்ற காரணத்திற்காக ஆயுள் தண்டனை குறைப்புக்கூட அளிக்கப்படுவதில்லை. ஆகவே சர்க்கார் இதை விசேஷ கவனத்துடன் பரிசீலனை செய்து அவர் களுக்கு விமோசனம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணை கொடுத்திருக்கிறோம். இதை அனுகூலமாக விவா திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—'' Sir, hon. Members evidently want to press for the premature release of these prisoners. Each case is considered on its own merits. Even according to the facts given by hon. Members, persons who belong to the Communist Party and who had been convicted along with these two prisoners have been released. That shows that these two prisoners

[Sri C. Subramaniam] [6th August 1954

have not been released not because they belong to the Communist Party but because each case is being decided on its own merits.

"Hunger-strikes for the purpose of getting released is certainly not a matter which should be encouraged by hon. Members and by this House and I wish the hon. Member had not come forward before this House with this adjournment motion which is almost encouraging hunger-strikes."

MR. SPEAKER :—"The prisoners have a remedy in a Court of Law. The subject-matter of the motion is not a fit subject for discussion under 'Adjournment Motions'. I, therefore, rule the motion out of order."

IV.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER :—"I have to announce to the House that I have received the following message, dated 28th July 1954, from the Governor of Madras :—

'In pursuance of Article 207, clause (1) read with Article 199, clause (1) sub-clause (*a*) of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby give my recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras Plantation Agricultural Income-tax Bill, 1954.'

V.—ELECTION OF A MEMBER TO THE STATE LIBRARY COMMITTEE.

THE HON. SRI C. SUBRAMANIAM :—"Mr. Speaker, Sir, I beg to move—

'*That in pursuance of rule* 2 (1) (v) *of the Madras Public Libraries Rules*, 1950, *this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect one person to the State Library Committee constituted under section* 3 *of the Madras Public Libraries Act*, 1948 (*Madras Act XXIV of* 1948).' "

MR. SPEAKER :—"Motion moved—

'That in pursuance of rule 2 (1) (v) of the Madras Public Libraries Rules, 1950, this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect one person to the State Library Committee constituted under section 3 of the Madras Public Libraries Act, 1948 (Madras Act XXIV of 1948).' "

The motion was put and carried.

12-10 p.m. MR. SPEAKER :—"With reference to the motion of the Minister for Finance and Education, regarding the election of one Member of this Assembly to the State Library Committee, I fix 3 p.m. on the 11th August 1954, as the time within which nomination papers of candidates for election to the State Library Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

6th August 1954] [Mr. Speaker]

"If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, one, a poll will be taken on a date to be announced in due course. The election will be by the ordinary method and not according to the principle of proportional representation by means of the single transferable vote."

VI.—GOVERNMENT BILL.

THE MADRAS HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (AMENDMENT) BILL, 1954 (L.A. BILL NO. 27 OF 1954).

THE HON. SRI B. PARAMESWARAN :—" Mr. Speaker Sir, I beg leave to present the report [a] of the Joint Select Committee appointed by the Legislature to consider the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1954, and move—

'*That the Bill as amended by the Joint Select Committee, be taken into consideration.*'

"The Joint Select Committee was appointed by the two resolutions of this House, dated 18th May 1954, and 19th May 1954, and by a resolution of the Legislative Council, dated 18th May 1954. The Committee held two sittings, the first on 2nd July 1954 and the second and the final sitting on 3rd July 1954.

"I need not go into the previous history of this legislation as it was fully dealt with by me at the time of the introduction of the original Bill. As the House is already aware, the Bill is intended to rectify the constitutional defects in the Act that came to notice in the judgments of the Madras High Court and the Supreme Court of India in the Shirur Math and the Chidambaram temple cases.

"The Joint Select Committee made a detailed scrutiny of the several clauses of the Bill but did not consider it necessary to introduce any drastic changes therein. I shall briefly mention the more important of the changes actually introduced by the Committee—

'(1) *Clause 5 of the Bill*.—Sub-section (1) of section 30 of the Act declares the right of the trustee of a religious institution to incur expenditure out of the funds in his charge for securing the health, safety and convenience of disciples and pilgrims, for the training of archakas, etc. Sub-section (2) of section 30, however, requires that, in incurring the expenditure, the trustee shall be guided by the general or special instructions which the Commissioner or the Area Committee may give. The Supreme Court held that the provision in sub-section (2) constituted an unreasonable restriction on the right of the trustee. Clause 5 of the original Bill, therefore, sought to delete sub-section (2). The Committee, however, thought that a total omission of the sub-section was not called for and decided that it was sufficient to substitute for the words " the trustee shall be guided by" occurring in the sub-section, the words " the trustee shall have due regard to ".

[a] Printed as Appendix IX on pages 86–101 infra.

[Sri B. Parameswaran] [6th August 1954

(2) *Clause* 9 *of the Bill*.—Section 39 (2) of the Act provides that where an institution has both hereditary and non-hereditary trustees, the Commissioner can appoint non-hereditary trustees as and when vacancies occur. Clause 9 of the Bill seeks to meet the objection raised to this section by the Madras High Court by providing that the Commissioner may appoint non-hereditary trustees only in case of mismanagement and that too only after giving due notice to the hereditary trustees and after holding an enquiry. The clause as first drafted specified certain circumstances in which the Commissioner could hold that the hereditary trustee or trustees were not discharging their duties properly. The circumstances specified are (*a*) the distance between the trustee's residence and the institution, (*b*) the pre-occupation of the trustee with his private or other public affairs and (*c*) the incapacity or disinclination of the trustee to attend to the routine of management. The Committee, after due consideration, resolved that the reasons referred to above should be deleted and that provision should be made requiring the Commissioner to give reasons for his decision to appoint non-hereditary trustees. The Committee also decided to make a provision allowing an appeal to a Court of Law against the Commissioner's decision.

(3) *Clause* 10 *of the Bill*.—Section 52 of the Act specifies the grounds on which a suit can be filed for the removal of a trustee of a math or specific endowment. Clause 10 of the Bill sought to introduce certain additional grounds, viz., " waste of funds, " " adoption of devices to convert the income of the institution into pathakanika, " or " leading a life inconsistent with the sanctity of the office ". The Committee resolved to substitute for the proposed ground " leading a life inconsistent with the sanctity attached to the office, " the ground " leading an immoral life or otherwise leading a life which is likely to bring the office of the head of the math into contempt ". '

" Sir, the other changes made in the Bill by the Joint Select Committee are mere drafting changes. For example, in view of the objections raised by the Supreme Court, it was thought desirable by the Committee to re-enact certain sections instead of merely amending them as was sought to be done in the original Bill."

MR. SPEAKER:—" Motion moved—

' That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1954 (L.A. Bill No. 27 of 1954), as amended by the Joint Select Committee, be taken into consideration.' "

SRI K. C. GOPALAN UNNI:—" On a point of order, Sir. During the previous sitting of the Assembly the hon. Member Mr. Narayana Kurup raised a point, viz., that whenever amendments are brought forward for a parent Act, the relevant portions of the parent Act also along with the amendments may be supplied to hon. Members. The Hon. Leader of the House also categorically assured us that he would do so. I will read from the proceedings what he said at that time. This is what he said:

' I shall see that such copies are made available to hon. Members sufficiently early. '

Here in this case we have not been supplied with the original Act. The assurance has not been followed up.

" I request you, Mr. Speaker, to take note of this. The Bill need not, therefore, be taken up for discussion now."

MR. SPEAKER:—" I wish to know what the Hon. Minister has got to say on this."

THE HON. SRI C. SUBRAMANIAM:—" It is not a point of order."

6th August 1954]

MR. SPEAKER :—" It is not a point of order. It is a request."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" If hon. Members had not been supplied with the original Act, I shall see to it."

MR. SPEAKER :—" Mr. Ratnam may move his amendment."

SRI A. RATNAM :—" Sir, I move—

'*That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill*, 1954, *as amended by the Joint Select Committee, be taken into consideration this day six months.*' "

SRI K. VINAYAKAM :—" I second the amendment."

MR. SPEAKER :—" Amendment moved—

' That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1954, as amended by the Joint Select Committee be taken into consideration this day six months.'

" The whole of to-day is allotted for this Bill. The Hon. Minister will reply at 4-30 p.m."

* SRI A. RATNAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 12-17 p.m.
ஹிந்து அற நிலைய தர்மஸ்தாபன பராமரிப்பு மசோதா ஒரு செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டு அங்கு இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டு இன்று சபை முன்பு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவானது 1951-ம் ஆண்டு இந்தச் சட்டசபையால் சட்டமாக்கப்பட்டு மூன்று வருஷ காலமாக அமுல்செய்யப்பட்டு வந்து அதன்பிறகு மடாதிபதிகளும், டிரஸ்டிகளும் அதிகாரவர்க்கத்தினர்களும் ஆட்சி பீடத்தில் உள்ள கமிஷனர்கள் போன்றவர்களும் மோதிக்கொண்டு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் அதன் காரணத்தால் சுப்ரீம் கோர்ட் அரசியல் சட்டம் 25, 26 ஆவது பிரிவின் பிரகாரம் இந்தச் சட்டத்தை நிராகரித்தது. அதன் காரணத்தால்தான் இந்தத் திருத்த மசோதா இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே, இந்த சட்டத்தை திருத்தி அமைப்பதற்காகவும் சரிசெய்வதற்காகவும் சில திருத்தங்களுடன் இந்த சட்டசபைக்குமுன் கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மசோதாவையே சென்ற மே மாதம் இதே சட்டசபையின்முன்பாகக் கொண்டுவந்தபோது பல தோழர்கள் இதைப் பற்றி அலசிப் பார்த்துப் பேசி இருக்கிறார்கள். அதையும் கனம் மந்திரி அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த மசோதாவைச் சரியாக திருத்தி அமைத்து மக்களுக்கு பயன்படும்படியாகவும், ஆலயங்களுக்குப் பயன்படும்படியாகவும், அரசாங்கத்திற்குப் பயன்படும்படியாகவும் மடங்களுக்குப் பயன்படும்படியாகவும் மற்றும் எல்லா வர்க்கத்தினர்களுக்கும் பயன்படும்படியாகவும் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டுதான் இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. அவ்விதம் அனுப்பிய பின் பல திருத்தங்களை கனம் மந்திரி அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார், அவ்விதம் திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மறுபடியும் இந்த சட்டசபைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் அவரே பொறுப்பு ஏற்கக் கூடிய அளவில் திருத்தங்கள் கொண்டு வரப்படவில்லை என்று தன்னுடைய ரிப்போர்ட்டிலேயே ஒப்புக் கொண்டிருக்கிறார். அவர் ரிப்போர்ட்டின் கடைசி பாராவில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால்

' As the Committee has not appreciably amended the provisions of the Bill, it considers that the Bill as amended by it, need not be republished '.

[Sri A. Ratnam] [6th August 1954

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் இது செலக்ட் கமிட்டியில் சரியானபடி பரிசீலனை செய்யப்படவில்லை என்று தெரிகிறது. செலக்ட் கமிட்டியில் மெம்பர்கள் இதைப்பற்றி விவாதிக்கும் போது இந்தத்திருத்த மசோதாவை சரியானபடி கொண்டு வர வேண்டும் என்றும் அப்படிச் செய்து ஒவ்வொரு வாக்கியத்தையும் சரியான முறையில் பரிசீலித்து சட்டமாக்க வேண்டும் என்று முக்கியமாக கனம் கே. பாஷ்யம் அவர்கள் சொன்னார். அப்பொழுது கனம் நிதி மந்திரி சி. சுப்ரமணியம் என்ன சொன்னார் என்றால் ' இப்பொழுது இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுங்கள், மறுபடியும் மற்றொரு முறை விரிவான திருத்தங்கள் கொண்டு வந்து அதை நிறைவேற்ற ஏற்பாடு செய்கிறோம்'. அவர் சொன்னது கூட கமிட்டியின் ரிப்போர்ட்டில் அதுவும் ஜூலை மாதம் 2-ம் தேதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அதாவது :—

' The Hon. Sri C. Subramaniam felt that only those amendments which were urgently needed should be considered then and that the Government would go into that question in course of time. At present they could go on with the present amending Bill. '

பிறகு நாங்கள் சரியான முறையில் ஒரு சட்டம் தோற்றுவிக்கிறோம் என்று அவரே சொல்லி இருக்கிறார். அது ஒரு கமிட்டிக்கு விடப்பட்டு மறுபடியும் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தான் அவர் அப்படி சொல்லி இருக்கிறார். அதுதான் காரணமே தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த மசோதாவானது சென்ற மூன்று மாத காலமாய், அதாவது மே மாதம் முதற்கொண்டு, செலக்ட் கமிட்டியில் இருந்திருக்கிறது. அதன் பிறகு சில திருத்தங்களுடன் இப்பொழுது இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிலைமை அவ்விதம் இருக்கும்போது என் இன்னும் ஆறு மாதகாலம் இதை நிறுத்தி வைக்கக் கூடாது என்று கேட்கிறேன். அதன் மத்தியில் இதை ஒரு கமிட்டிக்கு அனுப்பிவைத்து நன்றாக பரிசீலனை செய்து மக்களுக்கும், அரசாங்கத்திற்கும், மடாலயங்களுக்கும், பொது மக்களுக்கும் ஏற்ற அளவில் நல்ல முறையில் சட்டங்களை திருத்தி அமைக்கவேண்டும் என்பது என்னுடைய திருத்தத்தின் நோக்கம். இந்த முறையில் என்னுடைய திருத்தத்தை பிரேரேபிக்கிறேன்.

"சென்ற மே மாத விவாதத்தின்போது முக்கியமாக இந்த மசோதா மக்களுக்கும் மடாலயங்களுக்கும், சர்க்காருக்கும் பொதுப்படையாக நன்மை அளிக்கும் அளவில் இருக்க வேண்டும் என்று விவாதித்திருக்கிறார்கள். மடாலயங்களின் சொத்துக்களும், மனைகளும் நிலங்களும் எல்லா நிலமில்லாத மக்களுக்கும் பயன்படும்படியாக இருக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று விவாதித்திருக்கிறார்கள். அந்த நிலைமையை ஏற்படுத்தி மக்கள் சுபிட்சமாக வாழ வேண்டிய நிலைமையை உண்டு பண்ண வேண்டும் என்று விவாதித்தார்கள் : லட்சக்கணக்கான ஏக்ரா நிலங்களை வைத்துக் கொண்டிருக்கும் மடாலயங்களின் நிலங்களை எடுத்து நிலமில்லாதவர்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் சரியான முறையில் கொடுத்து நாட்டை சுபிட்சமாக்க வேண்டும் என்றும் விவாதிக்கப்பட்டது. மடங்களையும், சத்திரங்களையும், வீடில்லாதவர்கள் வீடுகளாக பாவிப்பதற்கும், பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்கும் ஒதுக்கிவைத்து அவைகள் மக்களுக்கு உபயோகப்படும்படியான ஏற்பாடுசெய்ய வேண்டும் என்று விவாதிக்கப்பட்டது. மடங்களுக்கும், கோவில்களுக்கும் பல லட்சக் கணக்கான ஏக்ரா நிலங்கள் இருக்கின்றன. அவ்விதம் இருந்தும், வருமானம் அதிகமாக வந்தும், பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதில்லை. மாணவர்கள் படிக்க வசதி இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பார்க்கும் போது மடங்களுக்கும் கோவில்களுக்கும் அதிகப்படியாக இருக்கும் சொத்துக்களை எடுத்து பாடசாலைகளையும், கலாசாலைகளையும் காலேஜ்களையும் அமைத்து நாடு முற்போக்கு அடையும்படியாகச் செய்ய வேண்டும். அப்பொழுது தான் நாடும் முன்னேற்றம் அடைய முடியும் என்பதாக சென்ற மே மாதம் நடந்த விவாதத்தின் போது அலசிப் பார்த்திருக்கிறோம்.

6th August 1954] [Sri A. Ratnam]

" ஆனால் இன்றையதினம் கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்த மசோதாவைப் பார்க்கும்போது அதில் என்ன தெரிகிறது? மடங்களுக்கும் கோவில்களுக்கும் பரம்பரையான டிரஸ்டிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கள்ளமார்க்கெட்நடத்துவது போல் அதனதன் சொத்துக்களை எடுத்து உபயோகப்படுத்திக் கொண்டுவருகிறார்கள். இவ்விதம் ஒருசில மடாதிபதிகளும் ஒருசில வைதீகர்களும் அனுபவித்துக் கொண்டுவருகிறார்கள். இதற்காக 1951-ம் வருஷம் சட்டபூர்வமாக அரசாங்கம் அவைகளுக்கு அரசாங்கத்தின் சார்பாக அதிகாரிகளையும் கமிஷனர்களையும் டிரஸ்டிகளையும் நியமித்திருக்கிறார்கள். பல ஏரியா கமிட்டிகளையும் நியமித்திருக்கிறார்கள். அதனால் பல சச்சரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. பிறகு அதிகாரிகளுக்கும் மடாதிபதிகளுக்கும் மடாலயங்களுக்கும் பல மோதல்கள் ஏற்பட்டு அதன் காரணமாக லட்சக்கணக்கான பணத்தை செலவழித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணத்தைக் கொண்டு நாட்டிற்கு நன்மை செய்வதற்கு அவர்கள் முன்வரவில்லை. ஆனால் இந்த சட்டத்தின்படி பார்த்தால் பரம்பரை டிரஸ்டிகள் நிர்வகிக்கும் ஸ்தாபனங்களில், புதிய டிரஸ்டிகளை அதாவது பரம் பரை வழிவராத டிரஸ்டிகளை நியமித்தால் பழைய டிரஸ்டிகள் கேஸ்கள் போடுவதற்கு சட்டத்தில் உரிமை உண்டு. மற்றும் பாதகாணிக்கை போன்றவைகளுக்கு கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும். அந்த நிலைமையில் இந்தச் சட்டம் இருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தில் 25, 26 ஆவது பிரிவின்படி அவர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்து இப்பொழுது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(At this stage, the Deputy Speaker occupied the Chair.)

" ஏதோ சில அதிகாரிகள் மீது குறைகூறி கேஸ் போட்டிருக்கிறார்கள். மடாதிபதிகள் மீது கேஸ் போட்டிருக்கிறார்கள். அதாவது சில்லரை விஷயங்களில் அவர்கள் கேஸ் போட்டிருக்கிறார்கள். இதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதற்குத் திருத்தம் வேண்டும் என்று இன்றைய தினம் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மறுபடியும் இதை ஒரு கமிட்டிக்கு விடவேண்டும் என்று கனம் மந்திரி அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார். இப்பொழுது மூன்று மாத காலம் காத்து இருந்தது போல் மறுபடியும் இன்னும் ஆறு மாத காலம் காத்திருக்கலாம். இதை நிறைவேற்றியபிறகு கூட அதிகாரிகள் மடாதிபதிகள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம். பிறகு அதன்படியும் திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டியதாக இருக்கும். இதைப் பற்றி கனம் சி. சுப்ரமணியம் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். அதன்படி இன்னும் ஆறு மாதகாலம் காத்து மறுபடியும் எல்லா விதிகளையும் பரிசீலனை செய்து அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக இல்லாமல் இதைத் திருத்திக் கொண்டு வர வேண்டும் என்பது என்னுடைய நோக்கமாகும். எனவே இதை மந்திரி அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

" 1947-ம் ஆண்டிலேயே கோவிலில் ஹரிஜனங்கள் நுழையும் சட்டம் கொண்டுவந்தார்கள். **(Removal of Civil Disabilities Act)** போன்று சட்டங்கள் கொண்டு வந்தார்கள். அவ்விதம் கொண்டுவந்தும் அந்த சட்டங்கள் எந்த நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆலயத்தில் நுழையும் மசோதா எந்த நிலையில் இருக்கிறது என்பது இன்றையதினம் நாம் பார்க்கிறோம். தீண்டாமை இன்னமும் நாட்டுப்புரங்களில் பலமாகவே இருந்துகொண்டுருக்கின்றது என்பதற்கு நான் பல உதாரணங்களைக் கொடுக்கமுடியும். உதாரணமாக ஒன்று. இது இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த சம்பவமோ அல்லது இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு நடந்த சம்பவமோ அன்று. சென்ற ஞாயிறு தினம் இந்தச் சட்டசபை மெம்பர் ஸ்ரீ கட்டிமுத்து அவர்களும் ஜில்லா டெபுடி கலெக்டரும், மற்றும் போலீஸ் அதிகாரிகளுமாக சேர்ந்துக் கொண்டு தென்னாற்காடு, விருத்தாசலம், நீராம்பட்டி என்ற கிராமத்தில் ஹரிஜன ஆலேயப் பிரவேசம் செய்ய 1954-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மீ 1உ அன்று முயற்சித்தபோது அங்கேயுள்ள உடையார்கள் எல்லோரு

மாகச் சேர்ந்துக் கொண்டு அதைத் தடுத்திருக்கிறார்கள். ஹரிஜனங்கள் ஆலயங்களில் நுழைவதைத் தடுக்கக்கூடாது என்று மாத்திரம் சட்டம் இருக்கிறது. இருந்தும் கூட அன்றைய தினம் அவர்கள் ஆலயத்திற்குள் நுழையமுடியாது திரும்பி வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த அறநிலையப் பாதுகாப்பு மசோதா, தீண்டாமை ஒழிப்பு மசோதா, ஆலயப் பிரவேச மசோதா ஆகிய இவைகள் எல்லாவற்றையும் ஒன்றாக வைத்துப் பரிசீலனை செய்ய அவசியம் ஒரு கமிட்டியை நியமித்தாக வேண்டும். அவசரம் அவசரமாக இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதினால் எந்தவிதமான பயனும் கிடையாது. ஒரு கமிட்டியை நியமித்து ஆறு மாத காலத்திற்குள் இதை நன்கு பரிசீலனை செய்யச் சொல்லி அதன் பேரில் சரியானதொரு முடிவுக்கு சர்க்கார் வருவதே சாலச் சிறந்தது என்ற கருத்துடன் இந்த மசோதாவை ஆறு மாத காலத்திற்கு ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

12-30 p.m. * SRI M. NARAYANA KURUP :—" Mr. Deputy Speaker, Sir, the working of the Madras Hindu Religious and Charitable Endowments Act has been a remarkable example of an Act producing the opposite effect of what was claimed for it by its sponsors. Perhaps it was never the intention of the sponsors of this piece of legislation to improve the management or administration of the endowments or the temples except to grab at the properties of those institutions. This would be evident from the fact that when the earliest legislation was brought on this topic, temples and institutions which had a low income—I believe less than Rs. 300—were omitted from its scope. This showed clearly that the Government wanted the institutions which had property and not the institutions themselves. As a result of this enactment, the Government and the trustees or the management had to do nothing else than to range themselves on opposite sides in law Courts. Sir, before the Amendment Act came into force, there were exceptionally good institutions and bad ones. But after the Act had been in force for so long, almost all the institutions have become uniformly bad. One need not have faith in God or religion to be hurt by the sight of half a dozen temples in dilapidated condition in almost all the villages. Sir, the Government should tell us in fairness why they have chosen to enact legislation in connection with institutions of a particular community. Of course, these are days when preaching secularism has become the fashion. If the intention of the Government is to promote the welfare of these institutions and make the management more effective, they will be charged with discrimination inasmuch as they have thought it fit to confer the benefit on a particular community. If it were otherwise, it will be a double discrimination because they seek to get at the properties only of a particular community. There has been a talk that the Central Government propose to bring forth comprehensive legislation covering all the religious and charitable institutions. The idea of bringing charitable institutions under Government control has at least a history of quarter of a century behind it. Still the Government have not thought it fit to extend the benefit of their administration to other communities and other endowments. Therefore, I would like the Hon. the Minister to give his views on that point.

6th August 1954] [Sri M. Narayana Kurup]

" Then, Sir, it is claimed that this enactment is intended to remedy certain defects. I doubt whether the obnoxious provisions that have been knocked at the head by the Supreme Court can be made possible under the existing Constitution, because by removing a word here or changing a phrase there, we cannot bring even the present Bill within the scope of the present Constitution. Sir, clarity and definiteness ought to be the main virtues of any piece of legislation. Though this Bill contains only a few clauses, it is a garland of generalities woven on the thread of vagueness. For instance, I may point out that with regard to authorising persons to enter a particular temple or a place of worship, it is provided that he must conform to the usages, custom and other things prevailing in each temple. I am sure that in each case there will be an injunction suit preventing the person from entering into the temple. This would seem as though the Government have not taken into consideration at all the Removal of the Civil Disabilities Act. Take for instance the famous Guruvayur temple. Only Nambudri Brahmins can enter the *sanctum sanctorum*. For other Brahmins, Non-Brahmins and others, probably definite distance has been prescribed. Therefore, if an officer wants to enter a certain place, how is it possible without dispute to enter such a place in view of the vagueness in the expression? There is indefiniteness and inaccuracy in other sections also and phrases like ' so far as may be ' and other generalizations occur.

" Then, Sir, this Bill empowers the Commissioner to do a lot of things which even the trustees are not entitled to do. Under the guise of *cypres* application of surplus funds of endowments, the Commissioner is empowered to utilize temple funds for other purposes. It is provided that if a trustee utilizes the funds of the institution for any other purpose, he is liable to be deposed but if the Commissioner does it, it is lawful. This is strange logic and strange law. Let me not be dubbed as sectarian or narrow-minded if I scrutinize the implications a little more minutely. Our State collects revenue from all people and spends them for all irrespective of the quantum that is contributed by anybody or any community. In a similar manner, if the income or the surplus income from all religious institutions is taken over by the Government and spent for the welfare of the community as a whole, I would fight for an equitable distribution irrespective of the quantum that is contributed by any particular community. But to take the funds only from a particular section of religious endowments and spend it for everybody is not proper and I think that a legitimate objection can be raised to this. This should not be done. Under this Bill, that power is given to the Commissioner.

" Then, Sir, there is a provision for the removal of trustees. 12-40 p.m.
I am not for a moment pleading for trustees, heads of maths or anybody else. By virtue of the power conferred by this section, the head of a holy math like the Sankaracharya math can be removed at the instance of the Commissioner on the ground of

'his leading an immoral life or otherwise leading a life which is likely to bring the office of the head of the math into contempt.' It is possible that the Commissioner himself may not have faith in God or religion and may not know what morality is. Still, such an officer is to probe into the private life of the head of a holy math, sit in judgment over his conduct and remove him from office! I submit that such provisions are monstrous. If we want better administration of endowments, this is not the way of doing it. We have had enough experience of it in the working of religious institutions. If we have a department or a board consisting of persons possessing the necessary qualifications and competent to supervise, it is understandable. For entry into every department, the Government prescribe certain qualifications. But for the management of religious and charitable institutions, they think that anybody can manage them. Probably we are in the days of secularism. This amending Bill accomplishes nothing and I doubt very much whether it will accomplish even the claim put forward by the Government that it remedies the defects in the Act in the light of the Supreme Court judgment. If the Government really mean to manage the religious and charitable endowments better, they must bring forward a comprehensive Bill covering the institutions of not only a particular community but of all the people in the State; there must be some method in madness.''

* SRI M. D. THYAGARAJA PILLAI :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹைகோர்ட்டு சுப்ரீம் கோர்ட்டு இவைகளின் தீர்ப்பால் ஏற்பட்ட விளைவைச் சமாளிக்கும் நோக்கத்துடன் சர்க்கார் கொண்டு வந்துள்ள அறநிலையப் பாதுகாப்பு திருத்த மசோதாவை நான் வரவேற்பதுடன், இன்னும் இந்த மசோதாவில் செய்யப்படவேண்டிய அபிவிருத்திகள் என்னென்ன என்பதைப்பற்றி சில யோசனைகளையும் இச்சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

" இந்த தர்ம ஸ்தாபனங்கள், மடங்கள், ஆலயங்கள் ஆகிய இவைகளின் நிர்வாகத்தை ஒழுங்கு படுத்தும் முறையில் முந்தைய அரசாங்கம் 1927-ம் வருஷத்திலேயே ஒரு என்டௌமெண்டு போர்டை ஏற்படுத்திற்று மீண்டும் சர்க்கார் 1951-ம் வருஷத்தில் அந்த ரிலிஜியஸ் என்டௌமெண்டு போர்டின் கீழ் இருந்த நிர்வாகத்தைத் திறம்பட நடத்த தாங்களே எடுத்துக்கொண்டு, கமிஷனர், டெபுடி கமிஷனர், அஸிஸ்டெண்டு கமிஷனர்கள் இவர்களையெல்லாம் நியமித்து இவர்கள் மூலமாகவும் ஏரியாக் கமிட்டிகள் மூலமாக்வும் நிர்வாகத்தை நடத்த ஆரம்பித்தார்கள். இருந்தும் முன்புகாணப்பட்ட குறைபாடுகள் எல்லாம் இன்றைக்கும் காணப்படுகின்றன. இப்போதிருக்கும் சட்டத்திற்கும், விதிகளுக்கும் முரணாகவே பழைய ஸ்கீம்கள் இருந்து வருவதால் பல காரியங்கள் அவைகளை அனுசரித்து நடைபெற்று வருகின்றன. இப்படியும் ஒரு நிர்வாகம் நடைபெறுமா என்று நீங்கள் எல்லோரும் ஆச்சரியப்படலாம். ஆனால் இன்றைக்கும் பல தேவஸ்தானங்களுக்குச் சென்று பார்த்தால் அங்கே நடந்துவரும் ஊழல்கள் நன்றாகத் தெரியும். குறிப்பாக பல இடங்களில் நிர்வாக அதிகாரிகளுக்கும், தர்மகர்த்தாக்களுக்கும் ஒற்றுமை கிடையாது. ஏரியாக் கமிட்டிகள் இருக்கின்றனவே தவிர அக்கமிட்டிகள் சொல்லும் பல யோசனைகள் எதுவும்அங்கீகரிக்கப்படுவதேயில்லை. பெரும்பாலான நிர்வாக அதிகாரிகள் பழைய ஸ்கீம் படியேதான் இப்போதைய சட்டம் விதிகளுக்கு மாறாக நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள். சர்க்கார் அனுப்பும் உத்திரவுகள் எல்லாம் தர்மகர்த்தாக்களுக்குக் காட்டப்படுவதேயில்லை. சர்க்கார் நிர்வாக அதிகாரிகளுக்கு அவைகளை அனுப்புகிறார்கள். அவர்கள் தர்மகர்த்தாக்

6th August 1954] [Sri M. D. Thyagaraja Pillai]

களுக்குத் தெரிவிக்காமலே எதாவதொரு பதிலை அனுப்பிவிடுகிறார்கள். இதனால் தேவஸ்தான நிர்வாகம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. நிர்வாகத்தில் இந்தமாதிரியான ஊழல்கள் மலிந்து கிடப்பதன் காரணமாக, பெரும்பாலான ஆலயங்களில் வருமானம் வெகுவாகக் குறைந்துகொண்டே வருகின்றது. பழம் பெருமை மிக்க ஆலயங்கள் பல அழிந்துகொண்டே வருகின்றன. அவைகளின் கோபுரங்கள் பழுதாகிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக தஞ்சாவூர் ஜில்லாவிற்குச் சென்று பார்த்தால் நான் சொல்வதன் உண்மை நன்கு விளங்கும். ஆகவே சர்க்கார் முதற்படியாக தர்மஸ்தாபனங்களின் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு வேண்டிய இலாகாவை அபிவிருத்தி செய்யவேண்டும். நிர்வாகம் சரியான முறையில் நடந்தால் தேவஸ்தானங்களின் வருமானம் ஆண்டுதோறும் அதிகப்படும். சர்க்கார் இலாக்காவுக்கும் அதிக வருமானம் வரும். ஒரு ஆலயத்திற்கு மிக அதிகமான பணம் வருமேயானால் அந்தப் பணத்தைக் கொண்டு அந்தப் பிரதேச மக்களுக்கும், அங்கு வரும் பக்தர்களுக்கும் செய்ய வேண்டிய சௌகர்யங்களையெல்லாம் செய்து கொடுத்தது போக பாக்கியுள்ளவற்றைக் கொண்டு பழுதாகிக்கொண்டு வரும் பல வேறு கோயில்களைச் செப்பனிடவும் செலவிட வேண்டியது அவசியமாகும். பொறுப்புள்ள கோயில் நிர்வாகிகளுக்கு அளிக்கப்படும் சம்பளம் மிகக் குறைவானதாக இருக்கிறது. அனேக இடங்களில் அவர்கள் சம்பளம் மிகக் குறைவானதாக இருப்பதால் அவர்கள் தகுந்த முறையில் நடந்து கொள்ளாமலிருக்கிறார்கள். அவர்களது சம்பள விகிதத்தில் பல கிரேடுகள் இருக்கின்றன. சிலர் இன்னமும் பழைய கிரேடுப்படியே சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஒழுங்கு படுத்தி நிர்வாக அதிகாரிகளுக்கும், கோயில் தர்மகர்த்தாக்களும் ஒற்றுமை நிலவும் படியாகச் செய்ய வேண்டும்.

"மேலும் சர்க்கார் ஒரு உத்தரவைப் போட்டால் அந்த உத்திரவு சரியான முறையில் எல்லோருக்கும் அறிவிக்கப்படுவதில்லை. குறிப்பாக எல்லா உத்திரவுகளும் எரியாக்கமிட்டி அங்கத்தினர்களுக்கும் தர்மகர்த்தாக்களுக்கும் அறிவிக்கப்படுவதில்லை. ஆகவே பஞ்சாயத்துப் போர்டு இலாக்காக்களில் வெளியிடும் புல்லட்டின் போல சர்க்கார் உத்திரவுகளை எல்லாம் தமிழில் வெளியிட்டு அறநிலைய நிர்வாகிகளுக்கும், தர்ம கர்த்தாக்களுக்கும், எரியாக்கமிட்டி அங்கத்தினர்களுக்கும் அனுப்பினால் ரொம்பவும் நன்றாக இருக்குமென்று நான் சர்க்காருக்கு யோசனை கூற விரும்புகிறேன். உடனுக்குடன் இந்த உத்தரவுகள் எல்லோருக்கும் அனுப்பப்பட வேண்டும். இம்மாதிரியாக பல சீர்திருத்தங்களைச் செய்தால்தான் நம் ராஜ்யத்திலுள்ள தர்ம ஸ்தாபனங்களின் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த வசதி எற்படும். இதில் சர்க்கார் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு நான் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

Sri C. KANDASAMY :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்துமத தர்ம பரிபாலன சட்டத்திற்கு சில திருத்தங்களைக் கொண்டுவந்து, அவைகள் பொறுக்குக் கமிட்டியால் பரிசீலிக்கப்பட்டு நம் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி விரிவாக, ஷரத்துவாரியாக விவாதம் நடத்தும்போது எங்கள் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய திருத்தங்கள் பேரில் அபிப்பிராயங்கள் சொல்லப்படும். அதற்கு மத்தியில் இப்பொழுது பொதுவாக தேவாலயங்களும் மடாலயங்களும் இன்று இருக்க கூடிய நிலைமையில் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய திருத்தங்கள் போதுமா என்பதைப்பற்றி இந்தச்சபை முதன்முதல் பரிசீலிக்கவேண்டும். 12.50 p.m.

" மடாலயங்களும் தேவாலயங்களும் பல நூறு ஆண்டுகளுக்கு முன் எற்பட்ட அந்தக்காலத்தில் கேள்விமுறையில்லாத அளவுக்கு நிலங்களை சொந்தமாக வைத்துக்கொண்டிருந்தன. அப்பொழுது நிறைய நிலங்களும் குறைந்த ஜனத்தொகையும் இருந்த காரணத்தினால் இப்பொழுது எற்பட்டுள்ள நிலைமை அந்தக்காலத்தில் இல்லாமல் இருந்தது. இதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இன்றையதினம் எந்த

அளவுக்கு நம் தேசத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பார்க்க வேண்டும். குறிப்பாக அன்னிய ஏகாதிபத்தியம் இந்த நாட்டில் இருந்து வெளியேறியபோது ஜனங்கள் முன்பு எவ்வளவு மகத்தான பிரச்னைகள் தலையெடுத்து இருக்கின்றன என்பதைப்பார்க்கும்போது அதற்கேற்றமுறை யிலே தர்ம பரிபாலனம் இருந்தால்தான் அது நீடித்து நிற்க முடியும் என்பதை சபையின் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

"இன்றையதினம் இருக்கக்கூடிய சூழ்நிலையில் பல லட்சக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். பல லட்சக் கணக்கான ஏழை குழந்தைகளுக்கு எழுத்தறிவுகூட அளிக்கமுடியாத நிலை நாட்டில் நிலவுகிறது. பல நோயாளிகள் ஆஸ்பத்திரி வசதிகூட இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்றவைகளை பராமரிப்ப தற்கு இந்த மடாலயங்கள், கோவில்கள் சொத்தின் பெரும்பகுதியை செலவிட்டால் கடவுளுக்கோ அல்லது மடங்களுக்கோ அல்லது மதத்திற்கோ எந்த விதத்திலும் குந்தகம் ஏற்பட்டுவிடாது. அந்த முறையில் திருத்தங் கள் செய்யப்படவேண்டும் என்று விரும்புகிறேன். இப்பொழுது இருக்கும் நிலையில் உயர்ந்த எண்ணத்துடன் பல சிக்கல்களை தீர்க்கக் கூடிய முறையில் நிர்வாக பொறுப்பை சரிவர ஏற்படுத்தினாலொழிய இந்த மடங்களிலும் கோவில்களிலும் ஊழல் மலிந்து மனிதத்தன்மை இல்லாத கூடங்களாக காட்சியளிக்கும் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த மடாதிபதிகளின் வாழ்க்கையைப்பற்றி கேட்கப்போனால் மிகமிக கேவலமாகயிருக்கிறது. சந்யாசிகோலத்தில் உள்ளவர்கள் படாடோப மாக மக்களால் மிக வெறுக்கத்தக்க முறையில் வாழ்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

"தஞ்சை ஜில்லாவில் மடங்களிலும், கோவில்களிலும் டிரஸ்டியாக இருப்பவர்கள் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் புஞ்செய் நிலங்களை வைத்தி ருக்கும் நிலப்பிரபுக்களே. இவைகளெல்லாம் சொல்லும்போது நான் நாஸ்திக வாதம் பேசுகிறேன் என்றோ கடவுளைப்பற்றி குறைகூறு கிறேன் என்றோ நினைக்கவேண்டாம். இந்தக் கோவில்களைச் சுற்றிலும் மடங்களைச் சுற்றிலும் இருப்பவர்கள் நல்ல முறையில் வாழவேண்டுமென்ற எண்ணம் இருக்கவேண்டும். பெரும்பாலும் நூற்றுக்கணக்கான நிலங்கள் வைத்திருக்கும் பட்டாதார்களிடம் தான் இவைகளெல்லாம் ஒப்படைக்கப் படுகின்றன. ஆகவே இந்தச்சொத்து இவர்களின் பரம்பரைச் சொத்தாகப் போய்விடுகிறது. ஆதலால் இவர்கள் வைப்பதுதான் சட்டமாக இருக்கிறது. தங்கள் சொந்த ஸ்தாபனமாகவே கருதுகிறார்கள். தங்கள் இஷ்டப்படி பணத்தை செலவழிக்கவும், அரசியல் செல்வாக்கு பெற்று எந்த விதமான காரியங்களையும் சாதித்துக்கொள்ள முடிகிறது. தங்களின்கீழ் உள்ளவர்களை தங்கள் இஷ்டப்படி நடத்துகிறார்கள். இவர்கள் எந்தவிதமான காரியங்களைச் செய்தாலும் இவர்களைக் கேட்பார் ஒருவருமில்லை. இங்கு இருக்கும் பணம் பாழாக்கப்படுகிறது. மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் உபயோகப் படுத்தப்படவில்லை என்று அனுபவம் உள்ள எவரும் மறுக்கமாட்டார்கள் என்பதை நூற்றுக்கணக்கான உதாரணங்களோடு விளக்கலாம். குறிப்பாக மடங்களிலும் கோவில்களிலும் எளிமையும் தூய்மையான வாழ்க்கையும் முக்கியமாகக் கருதப்படவேண்டும். திருநீரும், உத்திராக்ஷ மாலையும், நாமமும் அணிந்திருந்தால் அவர்களுக்கு மதிப்பு கொடுக்கும் காலம் மலையேறி விட்டது. உள்ளத்தில் தூய்மையும், நியாயமான உணர்வும், எளிய வாழ்க்கையும் நடத்தவேண்டுமென்ற எண்ணம் உடையவர்களினால் தான் இக்கோயில்களுக்கும், மடங்களுக்கும் மதிப்பும் விமோசனமும் ஏற்படுமே தவிர, வெறும் சம்பிரதாயத்திற்காக மக்களை அவர்கள் வணங்க வேண்டுமென்று சொன்னால் அது நடக்காத காரியம்.

"இந்த டிரஸ்டிகள் அமர்த்தப்படுவதிலும்கூட எந்த அளவில் நியமிக்கப்படுகிறார்கள் என்ற வரையரை கிடையாது. முன்னாள் ஜஸ்டிஸ் கட்சி ஆளும் கட்சியாக இருந்தபோது அவர்களுக்கு வேண்டியவர்களையே அமர்த்திக்கொண்டார்கள். இப்போதும் அம்மாதிரியாகவே காங்கிரஸ் கட்சி பதவிக்கு வந்த பிறகும் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை

6th August 1954] [Sri C. Kandasamy]

வைத்திருப்பவர்களுக்கும், பெரும் பெரும் பணக்காரர்களுக்கே இந்த டிரஸ்டி பதவிகள் அளிக்கப்படுகிறது. இந்த மாதிரியாக மாறி மாறி பழைய பரம்பரை பாத்தியதை நீடித்து வருகிறதேயொழிய கிராமங்களிலே இருக்கக்கூடிய ஏழைமக்களை அன்பாக நடத்தக்கூடிய ஒருவரை அமர்த்துவ தில்லை. பிரதேசக் கமிட்டியில் பெரும்பாலானவர்கள் காங்கிரஸ்காரர்கள் தான் உட்கார்ந்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விடங்களிலெல்லாம் இன்னும் பழைய முறையே நீடித்துவருகிறது. தங்கள் நிலங்களையும் கோவில் நிலங்களையும் ஒன்றாக சேர்த்து பயிரிடுகிறார்கள். கோவில் செலவிலேயே தங்களுடைய சொந்த செலவையும் சேர்த்து எழுதிவிடுகிறார்கள். ஏழை கள் மிக மிக கஷ்டப்படுகிறார்கள். அன்புத் தன்மையில் அவர்களை நடத்தி அவர்களின் அபிமானத்தை பெறுவதற்கு பதிலாக சைவம், வைஷ்ணவம் என்று பேசி மக்களை ஏமாற்றி பெருவாரியான பணத்தைக் கொள்ளை யடிக்கிறார்கள். ஏழை எளியவர்களுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படுவதில்லை. ஒழுங்காக நடத்தப்படும் கோவில்கள் 100-க்கு ஒன்று இரண்டு இருக்குமேயொழிய, மற்ற பெரும்பாலான கோவில்கள் மிகவும் மோசமான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதைப்பற்றி எவ்வளவு தான் புகார் செய்தபோதிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படு வதில்லை. இங்கு இருக்கும் டிரஸ்டிகளும் அதிகாரிகளும் நேரடியாக பணத்தை கொள்ளை அடித்திருந்தாலும்கூட எந்த விதமான நடவடிக்கை நடக்கப்படுவதோ தண்டனை விதிக்கப்படுவதோ கிடையாது. பல லட்சக் கணக்கான ரூபாய்கள் நியாயமற்ற முறையில் செலவழிக்கப்படுகிறது.

"சென்ற மூன்று வருஷ காலமாக பல கோவில்களின் நிர்வாகம் மிகவும் ஊழல் மலிந்தவையாக காணப்படுகிறது. இதைப்பற்றி புகார் செய்தும் டிபார்ட்மெண்டுக்கு மனுக்கள் அனுப்பியபோதிலும் இதன்மேல் நட வடிக்கை ஒன்றும் எடுக்கப்படவில்லை. நாட்டில் இந்தவிதமான நிலை நீடித்திருக்கும்போது பள்ளி ஆசிரியர்களிடம் தெய்வ நம்பிக்கை குறைந்து கொண்டே போகிறது என்று கனம் சுப்ரமணியம் பேசுகிறார். சரியான படி நிர்வாகம் நடந்தால்தானே, அன்புடன் மக்களிடம் பழகினால்தானே, அன்புநெறி போதிக்கப்பட்டால்தானே தெய்வநம்பிக்கை ஏற்படும். இன் றையதினம் தெய்வத்தைப் பணயமாக வைத்து கண்டபடி பணத்தைக் கையாளுகிறார்கள். பாடுபடும் ஏழை விவசாயிகளுக்குப் பணம் சேருவ தில்லை.

"தஞ்சையிலுள்ள ஒவ்வொரு கோவிலினுள்ள நிலங்களில் 10, 15 ஏக்கர் நிலங்கள் வீதம் குறைந்தபட்சம் மூன்று லட்சம் ஏழை குடியானவர்களுக்கு கொடுக்கலாம். பத்து லட்சம் பேர்கள் இதனால் நிம்மதியாக வாழ வழி செய்யலாம். இதன் மூலமாக ஓர் பெரிய பிரச்னையைத் தீர்க்கமுடியும். நிலச்சீர்திருத்தம் ஒருபுறம் இருக்க, குடியானவர்களுக்கு கொடுக்கப்படும் நிலங்கள் நடுத்தரகர் இன்றி நேரடியாக கொடுக்கப்படவேண்டும். இம்மா திரியான காரியங்களை அரசாங்கம் செய்ய முன்வந்தால் சுமார் மூன்று லட்சம் குடும்பங்கள் சீரும் சிறப்புமாக வாழ்வதற்கு ஏதாவது வழி இருக்கும் என்று நான் சொல்வது மிகையாகாது. இதனால் ஒவ்வொரு தாலூக்காவிலுள்ள மக்கள் சுகமாக வாழ்வதற்கு வழி உண்டு. என் தஞ்சை ஜில்லா பசிப்பிணியின்றி மிகவும் செழிப்புற்று விளங்கும். ஓரளவுக்கு இந்த சென்னை மாகாணத்திற்கே இதனால் பெரும் பயன் ஏற்பட முடியும். இவற்றையெல்லாம் யோசித்து விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும்படியான திருத்தங்களை ஏற்படுத்தி இந்தச் சட்டத்தைக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஆங்காங்கே நியமிக்கப்பட்டிருக்கும் பிரதேச கமிட்டிகள் கூடுமான வரை அந்தந்த பகுதியிலுள்ள மக்களின் அபிலாஷைகளை ஆதரித்து அவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்ய முற்படவேண்டும். அந்த பிரதே சத்திலுள்ள மக்களின் மத்தியில் தேர்தலை வைத்து அவர்களின் வாக்கிற்கு மதிப்பு கொடுக்கவேண்டும். இருபது, முப்பது வருஷ காலமாக பரம்பரை யாக இருந்தவர்களின் குடும்பத்தில் வந்தவர்கள் தான் டிரஸ்டியாக நியமிக்கப்படுகிறார்கள். ஆதலால் இந்த நில பிரபுக்களை எதிர்த்து இங்கு இருக்கும் அதிகாரிகளும், மற்றவர்களும் போராடவேண்டியவர்களாயிருக்

கிருர்கள். நிர்வாக காரியங்களில் கமிஷனர்கூட இந்த டிரஸ்டிகளை எதிர்த்து ஒன்றும் செய்ய இயலாத நிலைமையில் இருக்கிருர்கள். ஆதலால் இந்த டிரஸ்டிகளிடம் வேலை செய்யும் ஊழியர்களும் அதிகாரிகளும் ஒரு பெரிய போராட்டத்தை நடத்தவேண்டியவர்களாயிருக்கிருர்கள். இந்த மாதிரியாக பெரிய பணக்காரர்களையும், நிலப் பிரபுக்களையும் டிரஸ்டிகளாக அமர்த்தப்படுவதைவிட, ஏழைகளிடம் அன்போடு பழகக்கூடிய டிரஸ்டிகளை நியமித்தால் டிரஸ்டிகளுக்கும் ஊழியர்களுக்குமிடையே ஒற்றுமைப்பு ஏற்படும். கோவில்களிலும் மடங்களிலும் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.''

DEPUTY SPEAKER :—" The hon. Member may continue his speech after lunch. The House will now adjourn for lunch and meet again at 3 p.m.''

(After lunch—3 p.m.)

SRI C. KANDASAMY :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, காலையில் நான் நிர்வாக அதிகாரிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அதுசம்பந்தமாக பேசும்போதும் கிராமங்களில் இருக்கும் கோவில்களின் சூழ்நிலையை கவனிக்கும்போதும் அங்குள்ள பெரிய நிலப் பிரபுக்கள்தான் அங்குள்ள கோவில்களில் டிரஸ்டிகளாக இருக்கிருர்கள். அதனுல்தான் நிர்வாக ஊழல்கள் ஏற்பட்டு கோவில்கள் அழியக்கூடிய நிலை ஏற்படுகிறது. அதன் காரணம் அங்குள்ள நிர்வாக அதிகாரிகளுக்கு சம்பளம்தான் செலவாகிறது. அவர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுவதால் தான் இந்த நிலைமை ஏற்படுகிறது ; அதனுல்தான் ஒவ்வொரு தேவஸ்தானமும் ஊழலில் முழுகவேண்டியதாக இருக்கிறது. அதிகாரிகளுக்கு நியாயமான சம்பளம் கொடுத்து நிர்வாகப் பொறுப்பு ஏற்கக் கூடியவர்களை நியமிக்கவேண்டியதும் அவசியமாக இருக்கிறது. அவ்விதம் நிர்வாகிகளைப்பொறுக்கும் அதிகாரம் டிபார்ட்மெண்டின் கையில் இருப்பதால் சரியான முறையில் நிர்வாகிகளை நியமிப்பது கிடையாது. இந்தப் பொறுப்பை சர்விஸ் கமிஷன் கையில் கொடுத்தால் நிர்வாகம் சரிவர நடத்துவதற்கு வழி ஏற்படும். இதனுல் எல்லோருக்கும் கோவில் சம்பந்தமான வழிபாடுகளில் ஊக்கம் ஏற்படும். பிறகு எல்லோருக்கும் கடவுளிடத்தில் பரிபூர்ண பக்தி சுதந்திரம் ஏற்படும்.

" இப்பொழுது கோவில்களுக்கும் மடங்களுக்கும் அதிகப்படியான சொத்தும் பணமும் இருப்பதால்தான் அவைகளைப்பற்றி அதிகமாக பேசவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நிர்வாகஸ்தர்கள் சரியானபடி நிர்வாகம் நடத்தாமல் இருப்பதால்தான் கோவில்களுக்கும் மடங்களுக்கும் கெட்ட பெயர் ஏற்பட்டுவருகிறது. ஆயிரக்கணக்கான பணத்தை செலவு செய்து பிரசாரம் செய்தாலும், திருவெம்பாவை, திருப்பாவை மகாநாடுகள் பல நடத்தினுலும் செல்வாக்கு வந்துவிடாது. இவ்விதம் கோவில்களின் பணத்தை எடுத்து செலவழிப்பதால்தான் அவர்களுடைய செல்வாக்கும் குறைந்து வருகிறது. அதனுல் பல கோவில்கள் அழியக்கூடிய நிலைமை ஏற்பட்டிடிருக்கிறது. இதை கவனியாமல் இருந்தால் எந்த நிலைமைக்குக் கொண்டுபோய் விடும் என்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

" அடுத்தபடியாக, கோவில்களுக்கும் மடங்களுக்கும் பல லட்சக்கணக்கான ஏகரா நிலங்கள் இருக்கின்றன. இந் நிலங்களை சரியான முறையில் குத்தகைக்கு விட்டால்தான் தேவஸ்தானங்களுக்கும் மடங்களுக்கும் செல்வாக்கும் மதிப்பும் ஏற்படும் என்பதைக் கூற ஆசைப்படுகிறேன். இவ் விஷயங்களை கவனித்து, கணக்கில் எடுத்துக்கொண்டு கனம் மந்திரி அவர்கள் தக்க காலத்திற்குள் ஒரு திருத்த சட்டத்தைக் கொண்டு வருவதற்கு வழிவகை செய்தால் உண்மையாகவே அவர் எல்லோருடைய பாராட்டுதலுக்கும் உரியவராவார் என்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். கோவில்கள் விஷயம் கிராமங்களில் பெரிய பிரச்னையாக இருக்கிறது. மக்கள் மதத்தை வெறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிருர்கள். மதத்தைப் பற்றி கேவலமாக பேசக்கூடிய அளவில் நிலைமை வந்திருக்கிறது.

6th August 1954] [Sri C. Kandasamy]

" இன்றையதினம் கோவில்களில் சீர்திருத்தம் நடந்துகொண்டு இருக்கிறது. அதை வரவேற்கிறோம். கோவில்கள் சுத்தமாக இருக்கக்கூடிய அளவில் நிர்வாகம் நடக்க வேண்டும் என்ற ஒரு நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். கோவில்கள் சுத்தமாக இருக்க வேண்டியதுதான். ஆனால் கோவில் நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் ஒழுங்காகவும் நேர்மையாகவும் இருக்கும்படியாகச் செய்வது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. மதப் பிரசாரத்தில் மட்டும் இப்பொழுது நிர்வாகம் நடந்துகொண்டு வருகிறது. மடங்கள் ஏற்பட்டதன் எண்ணம் மதத்தைப்பற்றி நல்ல முறையில் பிரசாரம் செய்யவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் இப்பொழுது மடங்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டும் மிகவும் மோசமாக இருக்கிறது. இது சம்பந்தமாக பல திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் நியாயமான திருத்தங்கள். அவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். கமிஷனருக்கு அதிகப்படியான அதிகாரம் கொடுக்க வேண்டும் என்றும் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 5 சத விகிதம் வசூல் செய்வதை 7½ சதவிகிதம் வசூல் செய்து டிபார்ட்மெண்டை நல்ல முறையில் நடத்தவேண்டும் என்றும் ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு பணம் வேண்டும். அதற்காகத்தான் அந்தத்திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நல்ல நோக்கத்துடன் தான் அந்த திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

* SRI K. VENKATASWAMY NAIDU :—" Mr. Deputy Speaker, this Bill has come just to rectify some defects which have been pointed out in the original Act. Though the Act was passed in 1951, we were not able to make any appreciable progress all these three years because every section was questioned and the High Court's decision was very much against the Act. But luckily, the Supreme Court took a very sane and reasonable attitude and it has helped a great deal to solve the difficulties. Sections 21, 30 (2), 31, 35, 56 and 63 to 69 are the only sections which were declared invalid and section 76 (1) was declared invalid as conflicting with the Fundamental Rights. So we shall now confine ourselves to these sections. These sections deal with three or four aspects of temple administration.

" Section 21 deals with the right of entry in a public temple or other religious institution for certain purposes. This has been misunderstood as conflicting with temple-entry and it was said by a Member who spoke this morning that this is a negation of temple-entry. That is not at all the point at issue here. The right of entry to certain very important places in a temple is given only to those who perform religious functions there. If the Commissioner or other people have to go to places like the *sanctum sanctorum*, they are allowed to go subject to certain conditions. That is all the point that is involved in this section. Though the section was held invalid, it was said that the right of entry might be allowed under certain conditions. One condition is the giving of notice to the trustee and another condition is that the practices and usages of the institution concerned should be respected. A provision is also made that the servants of the institution could also enter such places if they are authorized by the Commissioner, Deputy Commissioner or Assistant Commissioner. Considering

the restrictions that are imposed, there is sufficient guarantee that the practices and usages of the institution will be respected. I think that the section as amended is in conformity with the wish of the Supreme Court and that it is in order.

